# தொழிலுக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்கு இடம்பெயர்ந்து சென்ற தாய்மார்களின் 06 – 16 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் எதிர்நோக்கும் உளவியல் பிரச்சினைகள்

**நிலுக்சி, சு., கஜவிந்தன்,க.**
மெய்யியற்றுறை (உளவியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
subramaniyamnilukshi44@gmail.com

*இலங்கையில் வறுமை, குடும்பச் சுமை, பிள்ளைகளின் கல்வி, வேலைவாய்ப்பின்மை, தங்கி வாழ விரும்பாமை போன்ற பல காரணங்களினால் பெண்கள் தொழில் செய்ய தூண்டப்படுகின்றனர். அந்தவகையில் இரத்தினபுரி மாவட்டத்தின் பலாங்கொடை பிரதேச சபைக்குட்பட்ட 254C கிராம சேவைக்குட்பட்ட பெட்டிகலை எனும் கிராமத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டு பணிப்பெண்களாக சென்ற தாய்மார்களின் 60 குடும்பங்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன. ஆய்வில் கலப்பு முறை ஆய்வு வடிவம் பயன்படுத்தப் பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவுகளாக நேர்காணலை அடிப்படையாகக் கொண்ட வினா கொத்து பிரதான தகவல் வழங்குநருடனான நேர்காணல் ஆய்வு முறைகள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. வினாக்களின் மூலம் பெறப்பட்ட கணியம் சார் தரவுகள் சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல; (SPSS) ஊடாக விவரணப் புள்ளிவியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. தாய் குடும்பத்தை விட்டுப் புலம்பெயர்ந்து செல்வத னால் பிள்ளைகள் பல்வேறு வகையான உளவியல் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். அதிலும் அதிகளவிலான பிள்ளைகள் தம்மைத் தாமே தனிமைப்படுத்திக் கொள்ளுதல், தம்மை தாழ்வாக நினைத்தல், கல்வி ரீதியாக இடைவிலகல், கல்வி அடைவுகளில் பாதகமான நிலையினை அடைதல், மொழி மற்றும் புறந்தள்ளுகை போன்ற அவர்கள் அடையும் தாக்கங்கள் உளவியல் ரீதியாக பல அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ளன.*

**திறவுச்சொற்கள்:** மத்திய கிழக்கு நாடுகள், தாய்மார்கள், உளவியல் பிரச்சினைகள்